# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஆறாம் பத்து

## மூன்றாம் திருவாய்மொழி - நல்குரவும்
## 'ப்ரணயகலஹத்தில் முரண்பட்ட தம்மை வசீகரித்தவன், முரண்பட்டது அனைத்தையும் செல்வமாகக் கொண்டு திருவிண்ணகரில் வாழும் கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தன்' என்று அருளிச் செய்தல்

** நல்குரவும் செல்வும் * நரகும் சுவர்க்கமுமாய் *
வெல் பகையும் நட்பும் * விடமும் அமுதமுமாய் **
பல் வகையும் பரந்த * பெருமான் என்னை ஆள்வானை *
செல்வம் மல்கு குடித் * திருவிண்ணகர்க் கண்டேனே 1

கண்ட இன்பம் துன்பம் * கலக்கங்களும் தேற்றமுமாய் *
தண்டமும் தண்மையும் * தழலும் நிழலுமாய் **
கண்டு கோடற்கு அரிய * பெருமான் என்னை ஆள்வான் ஊர் *
தெண்திரைப் புனல் சூழ் * திருவிண்ணகர் நன்னகரே 2

நகரமும் நாடுகளும் * ஞானமும் மூடமுமாய் *
நிகரில் சூழ் சுடராய் இருளாய் * நிலனாய் விசும்பாய் **
சிகர மாடங்கள் சூழ் * திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் *
புகர் கொள் கீர்த்தி அல்லால் இல்லை * யாவர்க்கும் புண்ணியமே 3

புண்ணியம் பாவம் * புணர்ச்சி பிரிவு என்ற இவையாய் *
எண்ணமாய் மறப்பாய் * உண்மையாய் இன்மையாய் அல்லனாய் **
திண்ண மாடங்கள் சூழ் * திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் *
கண்ணன் இன்னருளே * கண்டு கொண்மின்கள் கைதவமே 4

கைதவம் செம்மை * கருமை வெளுமையுமாய் *
மெய் பொய் இளமை முதுமை * புதுமை பழமையுமாய் **
செய்ய திண்மதிள் சூழ் * திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் *
பெய்த காவு கண்டீர் * பெருந்தேவு உடை மூவுலகே 5

மூவுலகங்களுமாய் அல்லனாய் * உகப்பாய் முனிவாய் *
பூவில் வாழ் மகளாய்த் * தவ்வையாய்ப் புகழாய்ப் பழியாய் **
தேவர் மேவித் தொழும் * திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் *
பாவியேன் மனத்தே * உறைகின்ற பரஞ்சுடரே 6

பரஞ்சுடர் உடம்பாய் * அழுக்கு பதித்த உடம்பாய் *
கரந்தும் தோன்றியும் நின்றும் * கைதவங்கள் செய்தும் ** விண்ணோர்
சிரங்களால் வணங்கும் * திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் *
வரங்கொள் பாதம் அல்லால் இல்லை * யாவர்க்கும் வன் சரணே 7

வன் சரண் சுரர்க்காய் * அசுரர்க்கு வெங்கூற்றமுமாய் *
தன் சரண் நிழற் கீழ் * உலகம் வைத்தும் வையாதும் **
தென் சரண் திசைக்குத் * திருவிண்ணகர்ச் சேர்ந்த பிரான் *
என் சரண் என் கண்ணன் * என்னை ஆளுடை என் அப்பனே 8

என் அப்பன் எனக்காய் இகுளாய் * என்னைப் பெற்றவளாய் *
பொன் அப்பன் மணிய ப்பன் * முத்தப்பன் என் அப்பனுமாய் **
மின்னப் பொன் மதிள் சூழ் * திருவிண்ணகர்ச் சேர்ந்த அப்பன் *
தன் ஒப்பார் இல்லப்பன் * தந்தனன் தன தாள் நிழலே 9

நிழல் வெய்யில் சிறுமை பெருமை * குறுமை நெடுமையுமாய் *
சுழல்வன நிற்பன * மற்றுமாய் அவை அல்லனுமாய் **
மழலை வாய் வண்டு வாழ் * திருவிண்ணகர் மன்னு பிரான் *
கழல்கள் அன்றி * மற்றோர் களைகண் இலம் காண்மின்களே 10

** காண்மின்கள் உலகீர்! என்று * கண் முகப்பே நிமிர்ந்த *
தாள் இணையன் தன்னைக் * குருகூர்ச் சடகோபன் சொன்ன **
ஆணை ஆயிரத்துத் * திருவிண்ணகர்ப் பத்தும் வல்லார் *
கோணை இன்றி விண்ணோர்க்கு * என்றும் ஆவர் குரவர்களே 11

**அடிவரவு:** நல்கு கண்ட நகரம் புண்ணியம் கைதவம் மூவுலகு பரஞ்சுடர் வன்சரண் என் நிழல் காண் குரவை

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---